[24th September 1958

பணியில் முன்னணியில் இருப்பதுதான். மீனுட்சி கோயிலில், ஹரிஜன பிரவேசங்கூட, அமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ்தான் நடைபெற்றது என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ?

MR. SPEAKER : அவர்களுக்குத் தெரியும் என்றுதான் சொல்லுகிருர்கள். (சிரிப்பு.)

Pearl fishing and sea-fishing at Tuticorin

* 493 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there are enough steam launches at Tuticorin for pearl fishing and sea-fishing and if so, how many?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : There is only one vessel " Goherkhaleeli " stationed at Tuticorin. She is mainly intended for pearl and chank fishing work. She is also utilised for fishing operations whenever she is not required for pearl or chank fishing.

9-50 a.m. SRI V. K. KOTHANDARAMAN : இப்பொழுது தூத்துக்குடியில் முத்துக் குளிப்பு நடக்கிறது. அப்படி முத்து எடுக்கக்கூடிய மீனவர்களுக்குப் போதுமான அளவில் ஸ்டீம் லாஞ்சுகள் இல்லை என்று கூறுகிருர்கள். அவர்களுக்கு கொடுத்து வருவதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே அவர்களுக்கு அதிகப்படியாக போட்டுகள் வேண்டியதாக இருப்பதால் அப்படிக் கொடுப்பதை அதிகப்படுத்துவதற்குச் சர்க்கார் முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : முத்துக் குளிப்பு வேலைகளுக்கு இப்போது போட்டுகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மேலும் இன்னும் அதிகப்படியான போட்டுகள் அவசியம் எனத்தோன்றுகிறது. இன்னும் அதிகப்படியாக வேண்டும் என்று கேட்டால் கவனிக்கப்படும்.

Music

* **494** *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கல்லூரிகளில் சங்கீதக்கலை போதிக்கிருர்களா ?

(ஆ) வாத்திய சங்கீதமும் போதிக்கிருர்களா ?

(இ) அப்படியானல், என்னென்ன வாத்தியங்களில் ?

(ஈ) சங்கீதப் பயிற்சி பெற்றவர்களுக்கு வழங்கப்படும் பட்டங்கள் என்னென்ன ?

(உ) அரசாங்கம் இக்கல்லூரிகளுக்கு உதவிவரும் தொகை எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes.

(*b*) Yes.

(*c*) Instrumental music is taught in veena, violin and piano.

(*d*) In cases where music is studied as an integral part of the University courses of studies no separate degree or certificate in Music is issued. Candidates who are successful in the examination for the course in the Central College of Karnataka Music are awarded the title " Sangeetha Vidwan " of the College.